இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 15-08-2023

# பதிலுரை அல்ல, விரக்தி உரை!

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சிமீது என்ன நோக்கத்துக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தார்களோ, அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது.

1. நாடாளுமன்றத்துக்கே வராத பிரதமர் நரேந்திர மோடியை நாடாளுமன்றத்துக்குள் வரவைக்க வேண்டும்.

2. நாடாளுமன்றத்தில் பேசாத பிரதமரை பேச வைக்க வேண்டும். – இதுதான் எதிர்க்கட்சிகளின் உண்மையான நோக்கம். இந்த இரண்டு நோக்கமும் நிறைவேறிவிட்டது. வராதவர், வந்தார். பேசாதவர், பேசினார்.

பிரதமரை நோக்கி எதிர்க்கட்சிகள் எழுப்பிய முக்கியமான கேள்விகள் இரண்டு.

**1. பற்றி எரியும் மணிப்பூருக்கு ஏன் செல்லவில்லை?**

**2. நாடாளுமன்றத்துக்குள் வருவதற்கு என்ன பயம்? – இதுதான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய இரண்டு முக்கியமான கேள்விகள். இந்த இரண்டு கேள்விகளுக்கும் இறுதி வரை அவர் பதில் சொல்லவே இல்லை. இரண்டு மணி நேரம் பேசினார். ஆனால் முக்கியமான இந்த இரண்டு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை.**

ஆகஸ்ட் 10 ஆம் தேதி மாலை 5.09 மணிக்கு பேசத் தொடங்கினார் பிரதமர். 2014 ஆம் ஆண்டு தேர்தல் மேடைகளில் காங்கிரஸ் கட்சி மீது என்ன குற்றச்சாட்டுகளை வைத்து வந்தாரோ அதே குற்றச்சாட்டுகளை வைத்தார். தொடர்பில்லாத ஏதேதோ பேசிக் கொண்டு இருந்தார். 'மணிப்பூர்' என்று குரல் எழுப்பிக் கொண்டே இருந்தார்கள் எதிர்க்கட்சிகள். மணிப்பூரைப் பற்றி பிரதமர் வாயே திறக்கவில்லை. ஒன்றரை மணி நேரமாகப் பேசியவர் மணிப்பூர் என்ற சொல்லையே உச்சரிக்கவில்லை. 6.40 மணிக்கு எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தார்கள். வெளிநடப்பு செய்தது அவருக்கு வசதியாக ஆனது. உடனே மணிப்பூர் பற்றி பேசத் தொடங்கினார். 7.22 மணிக்கு ஒரு வழியாக உரையை முடித்துக் கொண்டார். 2 மணி நேரம் 13 நிமிடம் பேசிக் கொண்டு இருந்துள்ளார் பிரதமர்.

**பிரதமரின் பதிலுரை என்பது பதில்கள் எதுவும் சொல்லாத உரை. இந்த உரை, 'பிரதமர்' ஆற்றிய உரையாக அமைய வில்லை. பா.ஜ.க. தலைவர் ஆற்றிய உரையாக அமைந்திருந்தது. தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகப் பேசும் உரையாக மோடியின் உரை அமைந்திருந்தது. 'எந்த மாநிலத்திலும் காங்கிரஸ் இல்லை' என்று பிரதமர் சொன்னார். அப்படியானால் இரண்டு மணி நேரம் எதற்காக காங்கிரஸ் கட்சிக்கு பதில் சொன்னார்? இல்லாத காங்கிரசுக்கு பதில் சொல்வதற்கு எதற்காக இரண்டு மணி நேரத்தைச் செலவு செய்தார்?**

ஒரு ஆட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பதில் சொல்லும் பதிலுரை எப்படி அமைந்திருக்க வேண்டும்? அந்த ஆட்சி இந்த நாட்டு மக்களுக்கு எந்த வகையில் நம்பிக்கை தரும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பதைச் சொல்வதாக அமைந்திருக்க வேண்டும். தனது ஆட்சி செய்த சாதனைகளை அடுக்குவதாக அமைந்திருக்க வேண்டும். ஒவ்வொரு திட்டமும் எத்தனை கோடி மக்களுக்கு நன்மை தந்துள்ளது என்பதை வரிசைப்படுத்துவதாக அமைந்திருக்க வேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இந்தியா எப்படி இருந்தது, இப்போது எப்படி வளர்ந்துள்ளது என்பதைப் புள்ளி விபரங்களோடு சொல்வதாக அமைந்திருக்க வேண்டும். 'இப்படி எல்லாம் நன்மை செய்திருப்பவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று சொல்வது எதிர்க்கட்சிகளின் உள்நோக்கம் ஆகும்' என்று முடிக்க வேண்டும்.

**மாறாக, காங்கிரஸ் கட்சியை, ராகுல் காந்தியை, இந்தியா முழுமைக்குமான எதிர்க்கட்சிகளை, 'இந்தியா' கூட்டணியை, திராவிட முன்னேற்றக் கழகத்தை – விமர்சிப்பதன் மூலமாக பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சார மேடையாக நாடாளுமன்றத்தை பிரதமர் நரேந்திர மோடி பயன்படுத்திக் கொண்டார்.**

**'காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருப்பதைப் போலவும் பா.ஜ.க. எதிர்க்கட்சியாக இருப்பதைப் போலவும்தான் இந்த உரை அமைந்திருந்தது' என்று மிகச் சரியாகவே கிண்டல் அடித்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏட்டுக்கு அளித்துள்ள பதிலில், "பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்டது. மூன்று நாட்களாக பா.ஜ.க. அரசு மீதும், குறிப்பாக பிரதமர் நரேந்திரமோடி மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டது.**

அது எதற்கும் பதில் சொல்லவில்லை பிரதமர். மாறாக, தேர்தல் மேடைகளில் பேசுவதைப் போல காங்கிரஸ் கட்சியை விமர்சித்து பேசிக் கொண்டு இருந்தார். 2014 தேர்தலுக்கு முன்னதாக அவர் காங்கிரஸ் கட்சி மீது என்ன குற்றச்சாட்டு வைத்தாரோ, அதே குற்றச்சாட்டை 9 ஆண்டுகளுக்குப் பிறகும் வைத்துக் கொண்டு இருந்தார். பிரதமர் உரையை **யாராவது எடுத்து முழுமையாகப் படித்தால், இது காங்கிரஸ் ஆட்சி மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து 'எதிர்க்கட்சித் தலைவர்' மோடி பேசுவதைப் போல இருக்கும்" என்று சொல்லி இருந்தார் முதலமைச்சர் அவர்கள். இதுதான் உண்மை.**

ஒரு முக்கியமான கருத்து பிரதமரின் உரையில் இருந்து தெளிவாகத் தெரிய வந்துள்ளது...

**'இந்தியா' கூட்டணி வலிமையோடு அமைந்துள்ளது என்பது பிரதமர் உரை மூலமாகத் தெரிகிறது. இந்தக் கூட்டணியின் பலம் என்பதும், அது வெற்றிக் கூட்டணியாக அமைந்திருக்கிறது என்பதும் நம்மை விட பிரதமர் அதிகமாக உணர்ந்துள்ளார். தனக்கு எதிரான வாக்குகளை மொத்தமாக வாங்கும் வல்லமை 'இந்தியா' கூட்டணிக்கு உண்டு என்பதை அவர் உணர்ந்துவிட்டார். 'இந்தியா' கூட்டணித் தலைவர்களால் தனது இமேஜ் சரிந்து விட்டது என்பதை அறிந்துவிட்டார் பிரதமர். அந்தக் கோபத்தைதான் – அந்த விரக்தியைத்தான் தனது உரை மூலமாக வெளிப்படுத்த முயற்சித்துள்ளார். எனவே, இது பதிலுரை அல்ல, விரக்தி உரை!**

## விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்கு முதல்வர் நல்கிடும் பெரும் ஒத்துழைப்புக்கு மனமார்ந்த நன்றி!

# விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கான அரசின் முன் முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்புத் தாரீர்!

### கோவளத்தில் சர்வதேச அலைச்சறுக்குப் போட்டியைத் தொடங்கி வைத்து – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக. 15 –**

**தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு சர்ஃபிங் அசோசியேஷன் (TNSA), இந்திய சர்ஃபிங் ஃபெடரேஷன் (SFI) இணைந்து, இந்தியாவில் முதன் முறையாக, சர்வதேச சர்ப் ஓப்பன் – தமிழ்நாடு (International Surf Open – Tamil Nadu ) நடைபெறுகிறது. இந்த பெருமைக்குரிய நிகழ்வானது வரலாற்றுச் சிறப்பு மிக்க மாமல்லபுரத்தில் 2023 ஆகஸ்ட் 14ம் தேதி முதல் 20ம் தேதி வரை நடைபெறவுள்ளது.**




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை கோவளம் கடற்கரையில் நடைபெற்ற விழாவில் சர்வதேச அலைச்சறுக்கு போட்டி 2023 ஐ தொடங்கி வைத்து, தேசிய அளவில் நடைபெற்ற சர்ஃபிங் போட்டிகளில் 16 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் வெற்றி பெற்ற கமலிக்கு சர்ஃபிங் பலகையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்தா .மோ.அன்பரசன், பாராளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், சர்ஃபிங் விளையாட்டு கூட்டமைப்பினர் கலந்து கொண்டனர்.

சர்வதேச அலைச்சறுக்கு போட்டி (WSL – INTERNATIONAL SURF OPEN – TAMILNADU) தொடக்க விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்கு முதல்வர் அவர்கள் தொடர்ந்து நல்கிடும் பெரும் ஒத்துழைப்போடு எனது மனமார்ந்த நன்றிகள்! என்றும் – 'விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முன் முயற்சிகளுக்கு, விளையாட்டுத் துறையில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச அலைசறுக்கு லீக் QS 3000 போட்டி 2023 மாமல்லபுரத்தில் நடைபெறுகின்ற இந்த சிறப்பான தருணத்தில், நாம் அனைவரும் ஒன்றாகக் கூடியுள்ளோம்.

2023 ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி கோப்பை போட்டியினை சென்னையில் வெற்றிகரமாக நடத்தியுள்ள நிலையில், உடனடியாக இந்த போட்டியினை சிறப்பாக நடத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஹாக்கி போட்டி முடிவுற்ற மறுதினமே இந்த சர்ஃபிங் போட்டியினை நடத்துவது, தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறைக்கு அளிக்கும் முக்கியத்துவம் மற்றும் சிறப்புமாகும்.

முதலமைச்சர் அவர்களின் ஈடுபாடின்றி இதுபோன்ற விளையாட்டு போட்டிகளை நடத்துவது இயலாது. அதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் முதல்முறையாக QS 3000 சர்ஃப் லீக் போட்டி தமிழ்நாட்டில் மாமல்லபுரத்தில் இன்று (14.8.2023) முதல் 20.8.2023 வரை நடைபெறுவதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் முழுமனதுடன் இந்த போட்டியினை சிறப்பாக நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.2.68 கோடி நிதியினை ஒதுக்கியுள்ளார்கள். இந்த சிறப்புமிக்க தொடரில் 12 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச அளவிலான 39 வீரர்கள், 14 வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இந்த போட்டியில் பங்கேற்கின்ற 15 இந்திய வீரர்களில் 12 வீரர்கள் தமிழ்நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளில் பெறுகின்ற புள்ளிகள் அடுத்து வருகின்ற சாம்பியன்ஷிப் போட்டிகளில் தகுதி பெற ஏதுவாக அமையும். இந்த தொடர் தமிழ்நாடு விளையாட்டுத் துறையின் வரலாற்றில் சிறப்புமிக்க நிகழ்வாக அமையும். தமிழ்நாட்டில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையில் 2023 – 24 பட்ஜெட்டில் இராமநாதபுரத்தில் தமிழ்நாடு நீர் விளையாட்டு ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களை சர்வதே போட்டிகளில் பங்கேற்கும் வகையில் ஊக்குவிக்கவும், அவர்களுக்கு தேவையான நிதி மற்றும் அனைத்து வசதிகளை மேம்படுத்தவும், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறையின் மீது தமிழ்நாடு அரசிற்குள்ள அர்பணிப்பினை வெளிகாட்டும் விதமாக முதலமைச்சர் கோப்பை 2023 போட்டி நடத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இந்த உலக சர்ஃபிங் போட்டியை தொடர்ந்து அரசின் முழுமையான ஒத்துழைப்புடன் ஹெச்.சி.எல். நிறுவனத்துடன் இணைந்து சைக்ளோத்தான் போட்டி சென்னையில் நடத்தப்பட உள்ளது. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த போட்டிகள் ஜனவரி 2024 ல் நடத்தப்பட உள்ளன. விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முன்முயற்சிகளுக்கு, விளையாட்டு துறையில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தேசிய அளவில் நடைபெற்ற சர்ஃபிங் போட்டிகளில் 16 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் வெற்றி பெற்ற கமலிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சர்ஃபிங் பலகையை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய சர்ஃபிங் கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு, துணைத் தலைவர் ராம் மோகன், பொதுச் செயலாளர் ஜெகன், தமிழ்நாடு சர்ஃபிங் சங்கத் துணைத் தலைவர் வீரா, பொதுச் செயலாளர் நவாஸ், பொருளாளர் தீபக் உள்பட விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நாங்குநேரி பகுதியில் சக மாணவர்களால் தாக்கப்பட்டு சிகிச்சை பெறும்

# மாணவர்கள் பாதுகாப்பாக பள்ளிப்படிப்பைத் தொடர அரசு உறுதுணையாக இருக்கும்!

### மருத்துவமனையில் மாணவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

நெல்லை, ஆக.15-

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அரசு பல்நோக்கு மருத்துவமனையில், நான்குநேரி பகுதியில் சக மாணவர்களால் தாக்கப்பட்டு, காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அண்ணன், தங்கையை பேரவைத்தலைவர் மு.அப்பாவு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.ப.கார்த்திகேயன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி. ஆர்.மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நாங்குநேரி பகுதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பாக நடந்த சம்பவத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விரைவு நடவடிக்கையாக, காவல்துறையினர், வருவாய்த் துறையினர் ஆகியோர் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்று நடவடிக்கை மேற்கொண்டு இரு சிறுவர்களையும் உடனடியாக பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். அவர்களுக்கு உடனடியாக உயர் சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய வகையில் அரசு பல்நோக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். மருத்துவர்கள் மூலம் மனநிலை ஆலோசனையும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இருவருக்கும் மிக தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அறுவை சிகிச்சையும் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

நேற்று முதலமைச்சர் அவர்கள், நிதி மற்றும் மனித மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சென்று அவர்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

அதன்படி, நிதி மற்றும் மனித மேலாண்மைத்துறை அமைச்சர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மற்றும் முக்கிய பிரமுகர்கள், உடனடியாக இரு சிறுவர்களிடம் அவர்களது தாயாரிடமும் ஆறுதல் கூறி நிதியுதவிகளை வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள், சிறுவர்களுக்கு எந்த மாதிரி மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. அவர்களுக்கு வேறு ஏதேனும் உயர் சிகிச்சை தேவைப்படுகிறதா என்பதை நேரில் பார்வையிடுமாறு உத்தரவிட்டார்கள். அதன்படி நேற்று மருத்துவமனைக்கு நானும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும் வந்துள்ளோம்.

இன்று காலையில் பேரவைத் தலைவர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் அதிர்ச்சியில் உயிரிழந்த சிறுவர்களின் தாத்தா இறந்தமைக்காக நிவாரண நிதியுதவிகளை நாங்குநேரிக்கு நேரடியாக சென்று அன்னாரது குடும்பத்தினரிடம் வழங்கியுள்ளார்கள். காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளியான 6 நபர்களை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

பல்நோக்கு மருத்துவமனை மருத்துவர்கள் சிறுவனுக்கு கையில் அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கு சென்னை ஸ்டான்லி மருத்துவர்களை வரவழைக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள். முதலமைச்சர் அவர்கள் ஆலோசனையின்படி சென்னை ஸ்டான்லி மருத்துவர்களை திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஓரிரு நாட்களில் வரவழைக்கப்பட்டு இங்கு தங்கி சிறுவனுக்கு சிகிச்சை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் ஒருநபர்ஆணையம் அமைத்து நல்லிணக்கம் சொல்லி தரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, இரு சிறுவர்களும் சிகிச்சை மேற்கொண்டு குணமடைந்து வீடு திரும்பியதும் அவர்கள் வேறு பள்ளியில் சேர்க்கப்பட்டு பாதுகாப்பாக பள்ளி படிப்பை மேற்கொள்வதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜீ, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் திருமதி.ரேவதி பாலன், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய தலைவர் தங்க பாண்டியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர் உட்பட அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், குழுமூர் ஊராட்சி செம்புரான் ஏரி ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா உள்ளார்.